# வகுப்பு 6 கவிதைப் பேழை

1.இன்பத்தமிழ் என்ற பாடலை எழுதியவர்
பாரதிதாசன்

2. தமிழுக்கும் அமுதென்று பேர் என்று போற்றியவர்
பாரதிதாசன்

3. பாரதிதாசனின் இயற்பெயர்
சுப்புரத்தினம்

4. பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டவர்.
சுப்புரத்தினம்

5. தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளைப் பாடுபொருளாகப் பாடியுள்ளாள்ளவர்.
பாரதிதாசன்

6. பாரதிதாசன் தம் கவிதைகளில் பாடுபொருளாகப் பாடியுள்ள புரட்சிகரமான கருத்துகள்

I. பெண்கல்வி
II. கைம்பெண் மறுமணம்
III. பொதுவுடைமை
IV. பகுத்தறிவு

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:
குறியீடுகள்:

A. I மற்றும் II
B. III மற்றும் IV
C. I, II மற்றும் IV
D. I, II, III மற்றும் IV

7. தம் கவிதைகளில் புரட்சிகரமான கருத்துக்களை பாடுபொருளாகப் பாடியுள்ளதால் எவ்வாறு போற்றப்படுகிறார்?
புரட்சிக்கவி

8. பாவேந்தர் என சிறப்பிக்கப்படுபவர் யார்?
பாரதிதாசன்

9. தற்கால இலக்கிய மரபு
தமிழ் வணக்கம்

www.Padasalai.Net V BOOPATHY DHARMAPURI

10. பாரதிதாசன் தமிழுக்கு சுற்றியுள்ள பெயர்கள்

1. அமுதம்
2. நிலவு
3. மணம்

11. பாரதிதாசனின் இன்பத் தமிழ் என்ற கவிதை எந்த நூலில் இடம் பெற்றுள்ளது
பாரதிதாசன் கவிதைகள்

12. பாரதிதாசனின் இன்பத் தமிழ் என்ற கவிதை பாரதிதாசன் கவிதைகள் என்ற நூலில் எந்த தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது
தமிழ்

13. தமிழ்க்கும்மி என்னும் பாடலை எழுதியவர் பெருஞ்சித்திரனார்

14. தமிழ் கும்மி என்னும் பாடல் பெருஞ்சித்திரனாரின் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது
கனிச்சாறு

15. "கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி இளங்கோதையரே கும்மி கொட்டுங்கடி" என்னும் பாடலை எழுதியவர்
பெருஞ்சித்திரனார்

16. ஆழிப்பெருக்கு என்பதன் பொருள்
கடல்கோள்

17. மேதினி என்பதன் பொருள்
உலகம்

18. பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு என்னும்நூல் எத்தனை தொகுதிகளாக வெளிவந்துள்ளது?
8

19. பெருஞ்சித்திரனாரின் தமிழுணர்வு நிறைந்த பாடல்களை கொண்ட நூல் தொகுதி
கனிச்சாறு

20. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்று போல் வருவது மோனை

21. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது எதுகை

22. பாடல் அடிகளில் இறுதி எழுத்து ஒன்று போல் வருவது இயைபு
23. செந்தமிழின்புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று பெருஞ்சித்திரனார் கூறுகிறார்?
எட்டுத்திக்கும்

24. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்
மாணிக்கம்

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

25. பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் யார்?.
பெருஞ்சித்திரனார்

26. பெருஞ்சித்திரனார் இயற்றியுள்ள நூல்கள்
1. கனிச்சாறு
2. கொய்யாக்கனி
3. பாவியக்கொத்து
4. நூறாசிரியம்

27. பெருஞ்சித்திரனார் நடத்திய இதழ்கள்
1. தென்மொழி
2. தமிழ்ச்சிட்டு
3. தமிழ்நிலம்

28. தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் .
பெருஞ்சித்திரனார்

29. பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு என்னும் நூல் எத்தனை தொகுதிகளாக வெளிவந்துள்ளது?
எட்டு

30. பெருஞ்சித்திரனாரின் எந்த நூல் தமிழுணர்வு நிறைந்த பாடல்களை கொண்டது?
கனிச்சாறு

31. சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர்
இளங்கோவடிகள்

32. இளங்கோவடிகள் எந்த மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது?
சேர மன்னர் மரபு

33. இளங்கோவடிகளின் காலம்
கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

34. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
சிலப்பதிகாரம்

35 தமிழின் முதல் காப்பியம்.
சிலப்பதிகாரம்

36. சிலப்பதிகாரம் வேறு எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது?
1. முத்தமிழ்க் காப்பியம்
2. குடிமக்கள் காப்பியம்

V BOOPATHY, DHARMAPURI www.Padasalai.Net

37. இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுவன.

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை

38. திங்கள் ஞாயிறு மழை என இயற்கையை வாழ்த்துவதாக தொடங்கும் நூல்
சிலப்பதிகாரம்

39. திங்கள் என்பதன் பொருள்

நிலவு

40. கொங்கு என்பதன் பொருள்

மகரந்தம்

41. திகிரி என்பதன் பொருள்

ஆணைச்சக்கரம்

42. மேரு என்பது

இமயமலை

43. கழுத்தில் சூடுவது ------

தார்

44. கதிரவனின் மற்றொரு பெயர்------
ஞாயிறு

45. தேன் நிறைந்த ஆத்தி மலர் மாலையை அணிந்தவன்
சோழமன்னன்

46. காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன். சோழமன்னன்

47. காணி நிலம் என்ற பாடலின் ஆசிரியர்
பாரதியார்

48. காணி நிலம் என்ற பாரதியாரின் பாடல் எந்த தொகுப்பில் இடம் பெற்றுள்ளது?
பாரதியார் கவிதைகள்

49. கிணறு என்பதை குறிக்கும் சொல்
கேணி

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

50. சித்தம் என்பதன் பொருள்
உள்ளம்

51. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின்
அடுக்குகள்

52. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்
பாரதியார்

53. பாரதியாரின் இயற்பெயர்
சுப்பிரமணியன்.

54. இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர்.
பாரதியார்

55. எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.
பாரதியார்

56. தம் கவிதையின் வழியாக விடுதலைஉணர்வை ஊட்டியவர்.
பாரதியார்

57. மண் உரிமைக்காகவும் பெண்உரிமைக்காகவும் பாடியவர்.
பாரதியார்

58. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கபாடல்கள் பலவற்றைப் படைத்தவர்.

59. பாரதியார் இயற்றியுள்ள நூல்கள்

1. கண்ணன் பாட்டு
2. குயில் பாட்டு
3. பாஞ்சாலி சபதம்

60. திருவள்ளுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டவர்?
இரண்டாயிரம் ஆண்டுகள்

61. எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளவர்.
திருவள்ளுவர்

62. திருவள்ளுவரின் சிறப்பு பெயர்கள்

1. வான்புகழ் வள்ளுவர்
2. தெய்வப்புலவர்
3. பொய்யில் புலவர்

www.Padasalai.Net
V BOOPATHY DHARMAPURI

63. திருக்குறளின் மூன்று பிரிவுகள்

1. அறத்துப்பால்
2. பொருட்பால்
3. இன்பத்துப்பால்

64, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
திருக்குறள்

65. திருக்குறளில் உள்ள மொத்த அதிகாரங்கள்
133

66. திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள்
1330

67. திருக்குறள் எந்த வகையில் சிறந்து விளங்குகிறது
"திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை"

68. திருக்குறளுக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர்கள்

1. உலகப் பொதுமறை
2. வாயுறை வாழ்த்து

69. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் நூல்
திருக்குறள்

70. அகர வரிசையில் அறிவுரைகளைச் சொல்லும் இலக்கியம்.
ஆத்திசூடி

71. ஆத்திச்சூடி எழுதியவர்
ஔவையார்

72. புதிய ஆத்திச்சூடியை எழுதியவர்
பாரதியார்

73. அறிவியல் ஆத்திச்சூடி எழுதியவர்
நெல்லை சு முத்து

74. ஔடதம் என்பதன் பொருள்
மருந்து

75. உடல் நோய்க்கு----------தேவை
ஔடதம்

76. "தம்மை ஒத்த அலை நீளத்தில் சிந்திப்பவர்" என்று மேதகு அப்துல் கலாம் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

V BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net

நெல்லைசு.முத்து

77. அறிவியல் அறிஞர் மற்றும் கவிஞர்.
நெல்லைசு.முத்து

78. நெல்லை சு முத்து பணியாற்றிய நிறுவனங்கள்
1. விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்
2. சதீஷ்தவான் விண்வெளி மையம்
3. இந்திய விண்வெளி மையம்

79. அறிவியல் கவிதைகள், கட்டுரைகள் பலவற்றைப் படைத்தவர்.
நெல்லை சு முத்து

80. வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்
-----இது யாருடைய கூற்று
பாரதியார்

81. மன்னனும் மாசறக் கற்றோனும்---இந்த பாடலை எழுதியவர் யார்? அவ்வையார்

82. மூதுரையின் ஆசிரியர்
ஔவையார்

83. ஔவையார் இயற்றியுள்ள மற்ற நூல்கள்
1. ஆத்திசூடி
2. கொன்றை வேந்தன்
3. நல்வழி

84. மூதுரை என்னும் சொல்லுக்கு பொருள்.
மூத்தோர் கூறும் அறிவுரை

85. மூதுரையில் மொத்தம் எத்தனை பாடல்கள்
31

86. மாணவர்கள் நூல்களை கற்க வேண்டும்
மாசற

87. துன்பம் வெல்லும் கல்வி இந்த பாடலின் ஆசிரியர் யார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net

88. எளிய தமிழில்சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

89. திரையிசைப் பாடல்களில்உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்.
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

90. மக்கள் கவிஞர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

91. மாணவர் பிறர் ----------நடக்கக் கூடாது.
தூற்றும் படி

92. நாம் -------சொல்படி நடக்க வேண்டும்
மூத்தோர்

93. பிறரிடம் நான் ------பேசுவேன்
இன்சொல்

94. பிறர் நமக்கு செய்யும் தீங்கை பொறுத்துக் கொள்வது -------ஆகும்
பொறை

95. நட்டல் என்பதன் பொருள்
நட்பு கொள்ளுதல்

96. ஒப்புரவு என்பதன் பொருள்
எல்லோரையும் சமமாக பேணுதல்

97. ஆசாரக்கோவையின் ஆசிரியர்
பெருவாயின் முள்ளியார்.

98. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர்
கயத்தூர்.

99. ஆசாரக்கோவை என்பதற்கு என்பது பொருள்.
நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு

100. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள்ஒன்று.
ஆசாரக்கோவை

101. ஆசாரக்கோவை மொத்தம் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
100

102. முத்தேன்

1. கொம்புத்தேன்

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net

2. மலைத்தேன்
3. கொசுத்தேன்

103. முக்கனி
1. மா
2. பலா
3. வாழை

104. முத்தமிழ்
1. இயல்
2. இசை
3. நாடகம்

105. நந்தவனம் என்பதன் பொருள்
பூஞ்சோலை

106. பார் என்பதன் பொருள்
உலகம்
107. பண் என்பதன் பொருள்
இசை

107. வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று.
தாலாட்டு

108. தால் என்பதற்கு என்று பொருள்.
நாக்கு
109. நாவை அசைத்துப் பாடுவதால் பெயர் பெற்றது.
தாலாட்டு (தால்+ஆட்டு)

110. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்கவைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல்
தாலாட்டு

111. சமர் என்பதன் பொருள்
போர்

112. மறம் என்பதன் பொருள்
வீரம்
113. எக்களிப்பு என்பதன் பொருள்
பெருமகிழ்ச்சி
114. கலம் என்பதன் பொருள்
கப்பல்

V. BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net

115. ஆழி என்பதன் பொருள்
கடல்

116. முடியரசனின் இயற்பெயர்
துரைராசு

117. முடியரசன் எழுதியுள்ள நூல்கள்

1. பூங்கொடி
2. வீரகாவியம்
3. காவியப்பாவை

118. திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப்பெற்றவர்.
முடியரசன்

119. நானிலம் படைத்தவன் என்ற பாடலின் ஆசிரியர்
முடியரசன்

120. முடியரசனின் நானிலம் படைத்தவன் என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்
புதியதொரு விதி செய்வோம்

121. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்
வீரம்

122. நான்கு நிலங்கள் என்பன யாவை

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்

123. அரிச்சுவடி என்பதன் பொருள்
அகர வரிசை எழுத்துக்கள்

124. நெய்தல் திணையின் நிலப்பகுதி
கடலும் கடல் சார்ந்த இடமும்

125. நெய்தல் நில மக்கள்

1. பரதவர்
2. பரத்தியர்

126. நெய்தல் திணை மக்களின் தொழில்

1. மீன் பிடித்தல்
2. உப்பு விளைவித்தல்

127. நெய்தல் நிலத்தின் பூ

V. BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net

தாழம்பூ

128. கடலோடு விளையாடு என்ற பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
நாட்டுப்புற இயல் ஆய்வு

129. நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் நூலைத் தொகுத்தவர்
சு சக்திவேல்

130. உழைக்கும் மக்கள் தம் களைப்பை மறக்க உற்சாகத்துடன் பாடும் பாடல்
நாட்டுப்புறப் பாடல்

131. காதால் கேட்டு வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வருவதால் நாட்டுப்புறப் பாடலை ----------என்பர்.
வாய்மொழி இலக்கியம்

132. நாட்டுப்புற பாடல்கள் அடங்குபவை
1. ஏற்றப்பாட்டு
2. ஓடப்பாட்டு
3. விளையாட்டுப் பாடல்கள்
4. தாலாட்டுப் பாடல்கள்

133. பாரதம் அன்றைய நாற்றங்கால் என்ற பாடலை எழுதியவர் தாராபாரதி

134. பாரதம் அன்றைய நாற்றங்கால் இப்பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
தாராபாரதியின் கவிதைகள்

135. "புதுமைகள் செய்த தேசம் இது
பூமியின் கிழக்கு வாசலிது"
இவ்வரிகள் யாருடையது?
தாராபாரதி

136. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்
திருக்குறள்

137. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம்
காவிரிக்கரை

138. கலைக்கூடமாகக் காட்சி தருவது
சிற்பக்கூடம்

139. தாராபாரதியின் இயற்பெயர்
இராதாகிருஷ்ணன்

140. கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர்.

www.Padasalai.Net
V BOOPATHY DHARMAPURI

**தாராபாரதி**

**141. தாராபாரதி இயற்றிய நூல்கள்**

1. **புதிய விடியல்கள்**
2. **இது எங்கள் கிழக்கு**
3. **விரல்நுனி வெளிச்சங்கள்**

142. **தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. **திருவள்ளுவர்**
2. **காளிதாசர்**
3. **கம்பர்**

**143. நம் முன்னோர்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியவை**
**அற இலக்கியங்கள்**

**144. "எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பனைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" !**
**இது யாருடைய பாடல் வரிகள்**
**- தாயுமானவனவர்**

**145. கூர் என்பதன் பொருள்**
**மிகுதி**

**146. தாயுமானவரின் பாடல்கள் என்ன தலைப்பில் உள்ளன? பராபரக்கண்ணி**

**147. திருச்சியை ஆண்டவிசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.**
**தாயுமானவர்**

**148. தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் நூலைத் ------------எனப் போற்றுவர்.**
**தமிழ் மொழியின் உபநிடதம்**

**149. இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல் வகை.**
**'கண்ணி'**

**150. நீங்கள் நல்லவர் இந்த பாடல் ஆசிரியர் யார்?**
**கலீல் ஜிப்ரான்**

**151. நீங்கள் நல்லவர் என்ற கலீல் ஜிப்ரானின் பாடலை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?**
**புவியரசு**

**152. புவியரசு மொழிபெயர்த்த கலீல் ஜிப்ரானின் பாடல்கள் எந்த நூலில் உள்ளன?**
**தீர்க்கதரிசி**

V. BOOPATHY, DHARMAPURI www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

153. லெபனான் நாட்டைச் சேர்ந்த கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முகஆற்றல்பெற்றவர்.
கலீல் கிப்ரான்

154. கவிஞர், புதின ஆசிரியர், கட்டுரையாசிரியர், ஓவியர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர்.
கலீல் கிப்ரான்

155. பரிசு பெறும்போது நம் மனநிலை............... ஆக இருக்கும்.
மகிழ்ச்சி

156. வாழ்வில் உயர கடினமாக ............... வேண்டும்.
உழைக்க

157. ஆசிய ஜோதி நூலின் ஆசிரியர் கவிமணி
தேசிக விநாயகனார்

158. கவிமணி தேசிக விநாயகனாரின் காலம்

20 ஆம் நூற்றாண்டு

159 . முப்பத்தாறு ஆண்டுகள்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.
கவிமணி தேசிக விநாயகனார்

160. கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.
தேசிக விநாயகனார்

161. ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய லைட் ஆஃப் ஆசியா (Light of Asia) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது.
ஆசிய ஜோதி

162. கவிமணியின் ஆசிய ஜோதி யாருடைய வரலாற்றைப் பற்றி கூறுகிறது?
புத்தர்

163. மாரி என்பதன் பொருள்
மழை
164. பூதலம் என்பதன் பொருள்
பூமி

165. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் _________
ஆசிய ஜோதி

166. நேர்மையான வாழ்வை வாழ்பவர் _________
எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர்

V BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net

167. ஒருவர் செய்யக் கூடாதது ________
தீவினை

168. வானைஅளப்போம் கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்.
--- என்று பாடியவர்
பாரதியார்

www.Padasalai.Net
V BOOPATHY DHARMAPURI

## வகுப்பு 6 உரைநடை உலகம்

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம் . -
என்று தமிழ்மொழியின்இனிமையை வியந்து பாடுபவர்

பாரதியார்

2. என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!

என்று பாரதத்தாயின் தொன்மையைப் பற்றிக் கூறியவர்

பாரதியார்

3. இலக்கியம் தோன்றிய பிறகு தோன்றியது

இலக்கணம்

4. நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்

தொல்காப்பியம்

5. தமிழ் என்ற சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்

தொல்காப்பியம்

பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி

தமிழ் மொழி

6. தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் என்ன எழுத்துகளாக

அமைந்துள்ளன

வலஞ்சுழி

7. தமிழென்கிளவியும் அதனோரற்றே-

தொல் : 386

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

8. தமிழ்நாடு என்னும் சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம் ஆளப்படும் இலக்கியம்

சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம்

9. இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடு ஆக்கிய

இதுநீ கருதினை ஆயின்.

சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் : 165

10. தமிழன் எனும் சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்

அப்பர் தேவாரம்

11. தமிழன் கண்டாய் -

திருத்தாத்தாண்டகம் : 23

12. ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.

சீர்மை

13. தமிழ் மொழியின் பலவகைச் சீர்மைகளுள்

குறிப்பிடத்ததக்கது.

சொற்சிறப்பு

14. தமிழ் மொழியின் இலக்கண நூல்கள்

1. தொல்காப்பியம்
2. நன்னூல்

15. சங்க இலக்கியங்கள்

1. எட்டுத்தொகை
2. பத்துப்பாட்டு

www.Padasalai.Net
V.BOOPATHY DHARMAPURI



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

16. அற நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார்

17. தமிழ் காப்பியங்கள்

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை

18. தமிழின் சிறப்பு பெயர்

முத்தமிழ்

19. முத்தமிழ்

1. இயல் தமிழ்
2. இசைத் தமிழ்
3. நாடகத் தமிழ்

20. தொன்மை என்னும் சொல்லின் பொருள்

பழமை

21. மா என்னும் சொல்லின் பொருள்

விலங்கு

22. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது

மொழி

23. பறவைகள் இடம் பெயர்தலை எவ்வாறு அழைப்பர் பெயர்
வலசை

24. சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை
கப்பல் பறவை (Frigate bird )

V.BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net

25. தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும் பறவை
கப்பல் பறவை (Frigate bird).

26. கப்பல் பறவை (Frigate bird) வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1. கப்பல் கூழைக்கடா
2. கடற்கொள்ளைப் பறவை

27. ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு "நாராய், நாராய், செங்கால் நாராய்" என்னும் பாடலை எழுதியவர்
சத்திமுத்தப்புலவர்

28. "தென்திசைக் குமரி ஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்" என்னும் சத்திமுத்தப்புலவரின் அடிகள் எந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன ?
பறவைகள் வலசை .

29. தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் எது?
சிட்டுக் குருவி

30. காக்கை குருவி எங்கள் சாதி - என்று பாடியவர்
பாரதியார்

31. இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோனோடி டாக்டர் சலீம் அலி

32. 'இந்தியாவின் பறவை மனிதர்' என்று அழைக்கப்படுபவர்.
டாக்டர் சலீம் அலி

33. தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி' (The fall of sparrow) என்று பெயரிட்டுள்ளவர்.
டாக்டர் சலீம் அலி

34. மனிதன் இல்லாத உலகில் பறவைகள்
வாழமுடியும்!
பறவைகள் இல்லாத உலகில் மனிதன்
வாழமுடியாது! - இது யாருடைய கூற்று

www.Padasalai.Net V.BOOPATHY DHARMAPURI



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**டாக்டர் சலீம் அலி**

**35. உலகிலேயே நெடுந்தொலைவு 22,000 கி.மீ. பயணம் செய்யும் பறவையினம்**

**ஆர்டிக் ஆலா**

**36. பறவை பற்றிய படிப்பு**
**ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY)**

**37. உலகச் சிட்டுக்குருவிகள் நாள்**
**மார்ச் - 20**

**38. பறவைகள் வலசை போக காரணங்களில் ஒன்று**
**இனப்பெருக்கம்**

**39. எந்திர மனிதனை எவ்வாறு அழைப்பார்கள்**
**ரோபோ**

**40. ரோபோ என்ற சொல்லை முதன் முதலாக பயன்படுத்தியவர் யார்?**
**காரல் கபெக் (Karel capek) , 'செக்' நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர்.**

**41. சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரவ்வுடன் சதுரங்க போட்டியில் கலந்து கொண்ட ஐ.பி.எம். நிறுவனத்தின் மீத்திறன் கணினி (Super Computer) பெயர்.**
**டீப் புளு (Deep blue)**

**42. உலகிலேயே முதன் முதலாக ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு சவுதி அரேபியா**

**43. சவுதி அரேபியாவில் முதன் முதலாக குடியுரிமை பெற்ற ரோபோவின் பெயர்**
**சோபியா**

**44. நுட்பமாக சிந்தித்து அறிவது**
**நுண்ணறிவு**

**45. தானே இயங்கும் இயந்திரம்**
**தானியங்கி**

**46. மனிதன் தன் வேலைகளை எளிதாக்க கண்டுபிடிக்க**
**எந்திரங்கள்**

V BOOPATHI DHARMAPURI
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

47. தானியங்கி எந்திரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு
செயற்கை நுண்ணறிவு

48. உலக சதுரங்க வீரர் வெற்றிகொண்ட மீத்திறன் கணினி (Super Computer) பெயர்.
டீப் புளு (Deep blue)

49. கல்விக் கண் திறந்தவர் என்று தந்தை பெரியாரால் மனதாரப் பாராட்டப்பட்டவர்.
காமராசர்

50. காமராசரின் சிறப்புப் பெயர்கள்
பெருந்தலைவர்
படிக்காத மேதை
கர்மவீரர்
கருப்புக் காந்தி
ஏழைப்பங்காளர்
தலைவர்களை உருவாக்குபவர்

51. நடுவண் அரசு காமராசருக்கு எந்த ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கியது
1976

52. சென்னையில் உள்ள உள்நாட்டு விமானநிலையத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது.
காமராசர்

53.காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000ஆம் ஆண்டு எங்கே அமைக்கப்பட்டது?
கன்னியாகுமரி

54. ஆண்டு தோறும் காமராசர் பிறந்த நாளான ஜூலை பதினைந்தாம் நாள் என்ன நாளாகக் கொண்டாடப்படுகிறது?
கல்வி வளர்ச்சி நாள்

55. மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தியவர்
காமராசர்

56. மாணவர்கள் பசியின்றிப் படிக்கமதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்
காமராசர்

57. பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தவர்.

www.Padasalai.Net
V BOOPATHY DHARMAPURI

காமராசர்

58. பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தியவர்
காமராசர்

59. தமிழ்நாட்டில் பல கிளை நூலகங்களைத் தொடங்கியவர்
காமராசர்

60. தமிழ்நாட்டில் கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர்.
காமராசர்

61. "பழையன கழிதலும் புதியன புகுதலும்"---
(நன்னூல் நூற்பா-462)

62. வாழ்க்கைக்கு வளம் தரும் மழை கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகி பண்டிகை என்னவாக கொண்டாடப்பட்டது? இந்திர விழா

63. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் கட்டுவது தோரணம்

64. மார்கழி மாதத்தின் இறுதி நாள்
போகி திருநாள்

65. மாட்டுப்பொங்கல் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ நடைபெறுவது
மஞ்சுவிரட்டு

66. மாடுகளை அடக்கி தழுவும் வீரவிளையாட்டு
மஞ்சுவிரட்டு

67. மஞ்சுவிரட்டு வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

1. மாடு பிடித்தல்
2. ஜல்லிக்கட்டு
3. ஏறு தழுவுதல்

68. திருவள்ளுவர் ஆண்டு எப்போது தொடங்குகிறது?
தை முதல் நாள்

69. திருவள்ளுவர் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?
தை இரண்டாம் நாள்

V BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

70. திருவள்ளுவர் பிறந்த ஆண்டு
கி.மு (பொ.ஆ.மு) 31

71. அறுவடைத் திருநாள் ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் என்ன பெயரில்கொண்டாடப்படுகிறது?
மகரசங்கராந்தி

72. பஞ்சாப் மாநிலத்தில். அறுவடைத் திருநாள் என்ன பெயரில் கொண்டாடப்படுகிறது?
லோரி

73. குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் அறுவடைத் திருநாள் என்ன பெயரில் கொண்டாடப்படுகிறது?
உத்தராயன்

74. பொருள்களை விற்பவர்களை எவ்வாறு அழைக்கிறார்கள்?
வணிகர்

75. பொருள்களை வாங்குபவர்களை எவ்வாறு அழைக்கிறார்கள்?
நுகர்வோர்

76. நம் அன்றாட தேவைகளான பால் கீரை காய்கறிகள் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள்
சிறு வணிகர்கள்

77. பெரும் தொகையை முதலீடு செய்து பொருள்களை அதிக அளவில் திரட்டி வைத்து விற்பனை செய்வது
பெருவணிகம்

78. நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது
பண்ட மாற்று வணிகம்

79. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்குச் செல்லும் போது குழுவாகவே செல்வதை எவ்வாறு அழைப்பர்?
வணிகச் சாத்து

80. கடல் வழியாகக் கப்பல்கள் மூலம் பொருள்களை அனுப்புவதும் வரவழைப்பதும்
நீர்வழி வணிகம்

V.BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

81. கப்பல்கள் வந்து நின்று போகும் இடங்கள்
துறை முகங்கள்

82 துறைமுக நகரங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

1. பட்டினம்
2. பாக்கம்

83. தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது பூம்புகார்

84. குதிரைகள் எங்கிருந்து வாங்கப்பட்டன?
அரேபியா

85. கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்க நேரம் இல்லாதவர்களுக்கு உதவுவது
இணைய வழி வணிகம்

86. வணிகரை "நடுவு நின்ற நன்னெஞ்சினர்" என்று பாராட்டும் நூல்
பட்டினப்பாலை

87. கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறைபடாது
-------இவ்வரிகள் பயின்றுவரும் நூல்
பட்டினப்பாலை

88. 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்தபோது ஆங்கில அரசு நடைமுறைப்படுத்தி இருந்த சட்டம்
ரௌலட் சட்டம்

89. காந்தியடிகள் எங்கு இருக்கும் போது தமிழை கற்க ஆரம்பித்தார்?
தென் ஆப்பிரிக்கா

90. காந்தியடிகள் யாருடைய தமிழ் கையேடு தம்மை கவர்ந்ததாக கூறுகிறார்?
ஜி யு போப்

91. காந்தியடிகளை மிகவும் கவர்ந்த நூல்
திருக்குறள்

92."இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று காந்தியடிகள் யாருடைய உரையைக் கேட்டு கூறுகிறார்?
உ.வே .சாமிநாதர்

www.Padasalai.Net V.BOOPATHY DHARMAPURI

93. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
மதுரை

94. மணிமேகலை எந்த ஊரைச் சேர்ந்தவள்?
பூம்புகார்

95. மணிமேகலையை மணிபல்லவத் தீவில் கொண்டு வந்து சேர்த்தது யார்
மணிமேகலா தெய்வம்

96. மணிபல்லவத் தீவில் மணிமேகலை அருகில் வந்தது யார்
தீவதிலகை

97. மணிபல்லவத் தீவில் இருந்த புத்த பீடிகையை காவல் காத்து வந்தது யார்
தீவதிலகை

98. மணிபல்லவத் தீவில் பூக்கள் நிறைந்து விளங்கிய பொய்கை
கோமுகி

99. வைகாசித் திங்கள் முழு நிலவு நாளில் கோமுகி
பொய்கை நீரின் நீரின் மேல் தோன்றும் அரிய பாத்திரம்
அமுதசுரபி

100. அமுதசுரபி யாருடைய கையில் இருந்தது
ஆபுத்திரன்

101 எந்த பாத்திரத்தில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் இருக்கும்
அமுதசுரபி

102. பூம்புகாருக்கு திரும்பிய மணிமேகலை யாரிடம் உணவு பெற செல்கிறாள்?
ஆதிரை

103. அள்ள அள்ள குறையாமல் உணவு வழங்கும் பாத்திரம்
அமுதசுரபி

104. தமக்கென முயலா நோன்றாள் - பிறர்க்கென
முயலுநர் உண்மை யானே (புறம் - 182)
புறநானூற்று அடிகள்

105. “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் ”
- வள்ளலார்

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

106. வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவி உணவு அளித்தவர் வள்ளலார்

107. மக்களுக்கு செய்யும் பணியே இறைவனுக்கு செய்யும் பணி என்று வாழ்ந்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்
அன்னை தெரசா

108. வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை
- அன்னைதெரசா

109. குழந்தைகளை பாதுகாப்போம் எனும் இயக்கத்தை தொடங்கியவர் கைலாஷ் சத்யார்த்தி

110. குழந்தைகளை தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம் உலகத்தைக் குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது
- கைலாஷ் சத்யார்த்தி

111. தற்காலத் தமிழ் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

எஸ்.ராமகிருஷ்ணன்

112. எஸ் ராமகிருஷ்ணனின் படைப்புகள்

1. நாவல்கள்
2. சிறுகதைகள்
3. கட்டுரைத் தொகுப்புகள்
4. சிறுவர் இலக்கியங்கள்

113. எஸ் ராமகிருஷ்ணன் எழுதியுள்ள நூல்கள்

1. உபபாண்டவம்
2. கதாவிலாசம்
3. தேசாந்திரி
4. கால்முளைத்த கதைகள்

www.Padasalai.Net
V.BOOPATHY DHARMAPURI

# வகுப்பு 6 விரிவானம்

1. உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தி உள்ளவர்
தொல்காப்பியர்

2. கடல் நீர் ஆவியாகி மேகமான பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும் அறிவியல் செய்தியை குறிப்பிடப்பட்டுள்ள பழந்தமிழ் இலக்கியங்கள்

1. முல்லைப்பாட்டு
2. பரிபாடல்
3. திருக்குறள்
4. கார்நாற்பது
5. திருப்பாவை

3. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி - என கூறியவர்
ஔவையார்

4. நிலம் தீ நீர் வளி விசும்போ டு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்.
- தொல்காப்பியம்

5. கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி...
- கார் நாற்பது

6. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
பதிற்றுப் பத்து

7. நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு.
- பதிற்றுப் பத்து

8. சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை ,நரம்பினால் தைத்த செய்தி எந்த சங்க இலக்கிய நூலில் இடம் பெற்றுள்ளது?
நற்றிணை

9. கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடிமுதிர் பரதவர்
- நற்றிணை

V BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

10 .தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்ற கருத்தை நிறுவிய அறிவியல் அறிஞர்
கலீலியோ

11. தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்ற அறிவியல் அறிஞர் கலீலியோவின் கருத்து  எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
திருவள்ளுவமாலை

12. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்டபனையளவு காட்டும் - இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்.
திருவள்ளுவமாலை

13. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்டபனையளவு காட்டும் - இவ்வரிகளை இயற்றியவர் யார்?
கபிலர்

14. தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள்

1. மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஆ. ப. ஜெ. அப்துல்கலாம்
2. இஸ்ரோஅறிவியல் அறிஞர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை
3. இஸ்ரோவின்தலைவர் டாக்டர் கை. சிவன்

15. 1954 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற கிழவனும் கடலும் ( T h e Oldman and the Sea.) என்னும் ஆங்கிலப் புதினத்தை எழுதியவர் யார்?
எர்னெஸ்ட் ஹெமிங்வே

16. தமிழில் அப்துல் கலாமுக்கு மிகவும் பிடித்த நூல்
திருக்குறள்

17. அப்துல் கலாமுக்கு பிடித்த லிலியன் வாட்சன் எழுதிய நூல்
விளக்குகள் பல தந்த ஒளி (Lights from many lamps)

18. பாதுகாப்புத் துறையை பொருத்தவரை இந்தியா செலுத்திய ஏவுகணைகள்

1. அக்னி
2. பிரித்வி

19. அப்துல் கலாமின் பொன்மொழி
கனவு காணுங்கள்

V.BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

20. ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் எங்கே உள்ளது?
சீனா

21. தமிழ்நாட்டில் உள்ளஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் அண்ணா நூற்றாண்டு நூலகம்

22. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சொந்தநூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
தரைத்தளம்

23. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
முதல் தளம்

24. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நூல்கள் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
இரண்டாம் தளம்

25. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
மூன்றாம் தளம்

26. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி எந்த தளத்தில் அமைந்துள்ளன?
நான்காம் தளம்

27. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கணிதம், அறிவியல், மருத்துவம் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
ஐந்தாம் தளம்

28. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை எந்த தளத்தில் அமைந்துள்ளன?
ஆறாம் தளம்

29. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வரலாறு, சுற்றுலா, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் எந்த தளத்தில் அமைந்துள்ளன?
ஏழாம் தளம்

30. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கல்வித் தொலைக்காட்சி, நூலகத்தின் அலுவலகப் பிரிவு எந்த தளத்தில் அமைந்துள்ளன?
எட்டாம் தளம்

V BOOPATHY DHARMAPURI www.Padasalai.Net

31 . நூலக விதிகளை உருவாக்கியவர்.
இரா. அரங்கநாதன்

32. இந்திய நூலகவியலின் தந்தை (Father of Indian library science)
இரா. அரங்கநாதன்

33. நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலர்

1. அறிஞர் அண்ணா
2. ஜவஹர்லால் நேரு
3. அண்ணல் அம்பேத்கர்
4. காரல் மார்க்ஸ்

34. சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் வழங்கப்படும் விருது
ச. இரா. அரங்கநாதன் விருது

35. மற்போரில் சிறந்த மாமல்லன் என்ற பெயர் கொண்ட பல்லவ மன்னன்
நரசிம்மவர்மன்

36. மாமல்லபுரத்தில் ஒரே பாறை பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட கோவில்.
இரதக் கோவில்

37. தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக் கலைக்கூடம்.
மாமல்லபுரம்

38. நான்கு வகை சிற்ப கலை வடிவமைப்புகள்

1. குடை வரைக் கோயில்கள்
2. ஒற்றைக்கல் கோயில்கள்
3. கட்டுமானனக் கோயில்கள்
4. புடைப்புச் சிற்பங்கள்

39. நான்கு சிற்ப கலை வடிவமைப்புகளும் காணப்படும் ஒரே இடம்
மாமல்லபுரம்

40. மாமல்லபுரம் இக்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
மகாபலிபுரம்

41. இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள்
வேலுநாச்சியார்

V.BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

42. தமிழோடு வேலுநாச்சியார் அறிந்த வேறு மொழிகள்
   1. ஆங்கிலம்
   2. பிரெஞ்சு
   3. உருது

43. வேலு நாச்சியார் யாரை மணந்துகொண்டார்?
சிவகங்கை மன்னர் முத்துவடுக நாதர்

44. எங்கு நடைபெற்ற போரில் முத்து வடுகநாதர் ஆங்கிலேயர்களால் நயவஞ்சகமாக கொல்லப்பட்டார்
காளையார்கோவில்

45. வேலுநாச்சியார் எங்கு தங்கி ஒரு படையைத் திரட்டி பயிற்சி அளித்தார்?
திண்டுக்கல் கோட்டை

46. வேலுநாச்சியாரின் அமைச்சர்
தாண்டவராயர்

47. வேலு நாச்சியாரின் படைத்தளபதிகள்
   1. பெரிய மருது
   2. சின்ன மருது

48. வேலு நாச்சியாரின் ஆண்கள் படை பிரிவுக்கு தலைமை தாங்கியவர்கள்
மருது சகோதரர்கள்

49. வேலு நாச்சியாரின் பெண்கள் படைப் பிரிவுக்கு தலைமை தாங்கியவர்
குயிலி

50. வேலுநாச்சியாரை காட்டி கொடுக்குமாறு ஆங்கிலேயர்களால் துன்புறுத்தப்பட்ட பெண்
உடையாள்

51. யாருக்காக நடுகல் நடப்பட்டது?
உடையாள்

52. வேலுலுநாச்சியாரின் காலம்
1730-1796

53. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்டஆண்டு
1780.

54. ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்தவர்
வேலு நாச்சியார்

55. சிவகங்கை மீட்கப்பட காரணங்கள்
   1. வேலுநாச்சியாரின் வீரம்
   2. மருது சகோதரர்களின் ஆற்றல்

www.Padasalai.Net
V BOOPATHY DHARMAPURI

3. ஐதர் அலியின் உதவி
4. குயிலியின் தியாகம்

V BOOPATHY DHARMAPURI
www.Padasalai.Net